# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கோபாலன் | நாள் | 16.12.2024 |
| தகப்பனார் பெயர் | மன்னாதன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

7) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் 3ம் பிரதிவாதியும், அவரது மனைவி கமலாவும் வாதிக்கும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தனசேகரனுக்கும், ஏதோ ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளனர் என நான் சொல்லியுள்ள நிலையில், அது என்ன ஆவணம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. வாதி தேவனுக்கு எந்த சர்வே எண்களில் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என நான் என் பிரமாண சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். 1, 2 பிரதிவாதிகளுக்கு கண்ணப்ப நாயுடுவும், கமலாவும் கிரயம் ஏதேனும் செய்துவைத்துள்ளனரா என்றால், செய்து வைத்துள்ளனர்.

8) அவ்வாறு கிரயம் ஏதேனும் வாங்கியிருந்தால், மேற்படி சொத்தை பொறுத்து கிரயம் பெற்றவர்கள் தான் உரிமையாளர்கள் என்றால், சரிதான். வழித்தடம் குறித்து வாதிக்கு 3ம் பிரதிவாதி ஒரு பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதாகவும், அதில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றாலும், சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியான ஆவணம் என இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

9) இ.ம.எண்.1/2022 என்ற மனுவில் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் 02.09.2013ம் தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டதாக உள்ளது எனவும், ஆனால், தானசெட்டில்மெண்ட் ஆவணம் 24.09.2013ம் தேதியில் வாங்கப்பட்டதாகவும்,

உள்ளதால் மேற்படி ஆவணம் மோசடியானது என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு எதுவும் தெரியவில்லை.

10) மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திட்டது தொடர்பாகத்தான் தற்போது இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் நீதிமன்றத்தால் மோசடியானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை வாதி என்னிடம் சொன்னாரா என்றால், இல்லை. ஏற்கனவே மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் சாட்சி கையெழுத்து இட்டது தொடர்பாக நான் அளிக்கும் சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால், நான் கையெழுத்து மட்டும் தான் போட்டேன். அது சரியானதா அல்லது தவறானதா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.